## Copy of Deposition

சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்

அசல் வழக்கு எண்.11 /2024

The Oaths Act 1969, Act No.44/1969 விதிமுறைகளின்படி 16.09.2025ம் நாளாகிய இன்று **திருமதி.P.ஸ்ரீதேவி.,எல்.எல்.எம்.,** அவர்களால் சாட்சியம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனியம்மாள் | தொழில் | : | |
| க/பெ.பெயர் | : | சண்முகம் | கிராமம் | : | |
| வயது | : | 74 | மாவட்டம் | : | |

**பி.வா.சா: 4 முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதி. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். வாக்குமூலத்தில் விபரங்கள் எனக்கு தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது பிரமாண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

குறுக்கு விசாரண (வாதி தரப்பில்):–

ஜோதிமணி எனக்கு என்ன உறவு என்றால் எனது அண்ணன் மகள். அவர் தனது விருப்பப்படி கலப்பு திருமணம் செய்து கொண்டாரா என்றால் ஆமாம். இவ்வாறு திருமணம் செய்தது அவரது அப்பா, அம்மா, சகோதரன், மாமா, கருப்பையா, பழனிச்சாமி ஆகியோர்களுக்கு விருப்பம் இல்லை என்றால் சரிதான். பின்னர் சேர்ந்து கொண்டார்கள். நான் சொல்வதுபோல் அனைவரும் சேர்ந்து கொண்டார்கள் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. உயில் எழுதிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ஜோதிமணி திருமணம் செய்துகொண்டு போன பிறகு 2வருடம் கழித்துதான் தெரியும். பிரதிவாதி நதியா தன்னுடைய பெயரில் சொத்தை எழுதிக்கொடுத்துவிட்டதாக கூறுவது சரியா என்றால் சரியல்ல. எனது அப்பா, அம்மா படிப்பறிவில்லாதவர்கள்

## Copy of Deposition

என்றால் சரிதான். எனது அப்பா, அம்மாவிற்கு வெளி உலக அனுபவம் கிடையாது என்றால் சரிதான். மற்றவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க கைரேகை,கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். வாதி ஜோதிமணிக்கு சட்டப்படியாக நீதிமன்றம் என்ன பாகம் நிர்ணயிக்கிறதோ அதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். நான் கோரியிருக்கும் பாகம் தவறானது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
|---|
| Interpreted<br>Him / Her To Be Correct<br>P SRIDEVI Digitally signed by P SRIDEVI Date: 2025.09.16 13:35:54 +0200<br>Subordinate Judge,<br>Kodumudi |